பிஸ்மில்லா ஹிர்றஹ்மாகிர்ரஹீம்

இஃது

திருச்சிறுப்பள்ளி ஜில்லாவைச்சேர்ந்த இலுப்பூரில்
பிறந்துவளர்ந்து கோயமுத்தூர் ஜில்லாவைச்
சேர்ந்த காங்கயம் என்னும் ஊரில் சிலகாலம்
வாசஞ்செய்து பின்னர் தாராபுரத்தில்
இப்போது வசிப்பவரும்
கா. பீர்முகம்மது சாஹிபு
குமாரரும் குரு ஒளிப்பிரகாச பிரதிஸ்டை
செய்பவரும் தேகதத்துவ ஞானபண்டித அருள்க்கவி
ஹக்கீம் பீ. அய்யூபு சாஹிபு பாடிய,

நெல்குத்தும் : ; ஞானப்பதம்

10 APR 1934
MADRAS

இவை

ம[illegible]க்கம்பட்டி மஷாயிகது மவுலானா மவுலவி
அ[illegible] இபுறகீம் ஆலிமுல்
மஷாயிக்கு அவர்களால் பரிசோதிக்கப்பட்டு
தாராபுரம் இந்நூலாசிரியரின் முரீதின்தோஸ்தும்
வா. சேகப்துல் காதர் றவுத்தரின்
குமாரரும் ஆகிய
முகம்மது றவுத்தரின் முயற்சியால்
இராமநாதபுரம்
ச. யி. முஹம்மது ஹூசேன் ராவுத்தரின்
நன்முயர்சியின் பேரில்
மதுரை, ராஜேஸ்வரி பிரஸில்
...டாம் பதிப்பாக பதிப்பிக்கப்பட்டது.

...ல அணு] 1934. [0-1-...

Q7:417
N34
149255

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

நெல் குத்தும் ஞானப்பதம்.

(இராகம் செஞ்சுருட்டி ஆதி தாளம்.)

நெல்லுக்குத்துகிற பதத்தே நான்
சொல்லிவாரேனந்த விதந்தை யினி
அல்லும்பகலும் துற்குணத்தே நீக்கி
வெல்லு அஜாசில்மும்மலத்தே வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி. ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

அல்லாஹுவென்ற ஜோதி றப்பில்
ஆலம்மீனும் பிரக்யாதி கல்பு
தில்லாலும் நாவால் ஓதி ஹக்கை
தினந்துதிப்பதே நீதி வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழச்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

முன்னவனின் திருவேதம் கூறும்
முகம்மதிரசூலுல்லாதம் ஒளி
வெண்ணிரு கண்மணி பாதம் சிர
மேற்றிப்பணிவதே நீதம் வாசி
ஹா ஹா சரம் மாத்திகுத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

ஆதம்மெனும் தந்தை போற்றி தாயார்
ஹவ்வாவைத்துதி சாற்றி மறை
வேதத்தின் போதமாந்தூற்றி எடு
விலகலாம் பதர் மாற்றி வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

நற்செயலானது நெல்லு பதர்
துற்செயலென்பதைத்தள்ளு பைம்
பொற்கூடை உவப்பாயள்ளு உங்கன்
புத்திமுறமாக்கித்தெள்ளு வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

மனோன்மணியெனும் வள்ளி சிந்தை
முறத்திலே நெல்லை யள்ளி கெட்ட

குறுவெனும் பதர் தள்ளி — தினம்
குத்தடி திக்கிரைச்சொல்லி — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ — திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

உடல்தான் உரலென்றாச்சு — அதற்
குலக்கை என்பது மூச்சு — நல்ல
நடப்பெனும் நெல்லைப்பாச்சு — யோக
நாட்டத்தையே எடு வாச்சு — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ — திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

சிந்தையெனும் மனமுறத்தே — ஞானத்
தேட்டமெனும் கையிலெடுத்தே — புவிப்
பந்தமெனும் குப்பை புடைத்தே — தள்ளிப்
பலநெடுநூணைத்தொடுத்தே — வாசி
ஹா ஹா திக்கிர் முழக்கிக்குத்தடி ஹூ ஹூ — சரம்
மாத்திக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

உலக்கைப்பூணது உறுதி — பீர்
உபதேசம் ஹூவில் பொருதி — யிது
கலக்கமில்லாத சுருதி — தன்னை
கண்டுதெளியடி கருதி — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ — திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

மூலக்குகை உரல்க்குளியாம் — வாசி
முட்டிய பூணின் களிபாம் — யிந்த
ஞாலத்திலே தவ வழியாம் — வேத
ஞாயமெல்லாம் மிறைமொழியாம் — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ — திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

களவடையெனும் யிருப்பு — மனம்
கலையாஒர்மையில்த்திருப்பு — திரு
வுள்ம் வசப்படப் பொருப்பு — ஞான
தேசிகராம் பீரின் குரிப்பு — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ — திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்

07.417
M34

பெலமுடனுறவெடுத்து யிருப்
பென்ற களவடை தொடுத்து மூச்சு
உலக்கை கரத்திலெடுத்து எக்கின்
உருதிப்பூண்பெலப் படுத்து வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

பாபமென்பது உம்மி அது
பரந்தாலதாபு கம்மி கெட்ட
கோபம் வேண்டாதே விம்மி நாளைக்
கொடும்பிளைவரும் பொம்மி வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

தவிடெனும் பொய்யை நீக்கி மனச்
சஞ்சலமட்டையைப் போக்கி மோன
மவுனச் சல்லடை தூக்கி சலி
மஹரிபாவை உண்டாக்கி வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

எட்டடித் தீவெனும் உரலு தவு
டெனும்புந்தூசிதான் மருளு ஞானக்
கட்டெனத்தீட்டில்போம் இருளு வெண்மை
கண்ட அரிசிபார் அருளு வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

குத்திப்புடைப்பதே அரிவு உரல்
குளியில் தீட்டலே தெரிவு ஞானப்
பத்தியில்லாக்குத்து முரிவு னேட்டம்
பாரும் அகக்கண்ணே விரிவு வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

சிற்றறிவென்பது குருணை அது
ஜெகத்துக்குதவும் கருணை ஞானம்
கற்றறிவோர் இறையோனே அகக்
கண்ணேறேகிப்பார் தீனே வாசி

ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

அருளரிசியை எடுத்து — சபூர்
அடக்கம் பானைக்குள் படுத்து — தவு
டிருளுமிப்பாவம் விடுத்து — சிர்ரு
இன்ப அழுக்கையும் துடைத்து — வாசி
ஹா ஹா திக்கீர் முழக்கிக்குத்தடி ஹூ ஹூ சரம்
மாத்திக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

ஹாவென்றே தூக்கி நீட்டு — அல்லா
ஹூவென்றே உள்ளிலே ஊட்டு — பொய்
சாவென்ற மாயையைத் தீட்டு — உரல்
தளம்பாதே குத்தி வாட்டு — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

அல்லாவென்றகியாலே — சரம்
அரிந்து ஓட்டுவதாலே — உயிர்
எல்லாம் ஒன்றென்பதாலே — எக்கீன்
இருக்கமதில் ஒளிவாலே — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

மூச்சில் நினைவையும் ஊட்டி. — கியால்
மூக்குநேர் விளி காட்டி — யின்னும்
பாச்சு உன்னுவழி ஓட்டி — அங்கே
பாரும் அகக்கண்ணில் சூட்டி — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

மூந்தின துதிக்கீர் ஜல்லி — யாதின்
மூச்சினில் ஹூவென்று சொல்லி — புவிப்
பந்தமூவாசையைத்தள்ளி — நினப்
போடுருவாக்கடி வள்ளி — வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

திக்கீர் கபியில் மவுனம் — மூச்சில்
சேருகலிமாவின் கவனம் — மனம்

சொக்க ஒரு மூச்சிலேனும் இன்று
துதிமரக்காதே பேணும் வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

கல்பியாந்திக்கீர் யாது தொணி
காட்டாதே நினைவோடோது உன்னி
இல்லென்றே மூச்சின் போது ஹூவில்
இனக்கிச்செய்வாய்சூது வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

சிர்ரியெனும் திக்கீர் யாது ஹக்கில்
சேருமே அல்லாமல் ஜூது யாஹூ
அர்ரஹ்மான்பில் உஜூது மூச்சில்
ஆனால் கூடும்போது வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

அந்சுக்குள்ளே ஒரு பிஞ்சு றப்பின்
பாதில் சரத்தையே கொஞ்சு உந்தன்
நெஞ்சின் ஆண்மையைப் பஞ்சு போலே
நீக்கிட வேறப்புக்கஞ்சு வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

பல்லுக்குத்தி மண்ணீரல் அதன்
பார்த்திபனாகிய ஜிப்ரீல் வழி
சொல்லுக்குடையது வாயில் லாவென்
றோதுவதாம கலிமாவில் வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

தண்ணியது சிகப்பீரல் அந்தக்
தானத்தரசு மீக்காயில் வழி
கன்னதுவாம் பார்வை விளியில் ஹர்பு
காண்பீர் இலஹாவென்றுணர்வில் வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

காற்றதுவாம் நுறையீரல் அதற்
கதிபதி இசுறாபீல் அதன்
தோற்றமதாம நாசிவளியில் வாடை
தோணும் இல் என்பதாம் கலியில் வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

பித்துப்பையல்லவோ நெருப்பு அதி
பதிஇசுராயீல் இருப்பு செவி
ஒத்துக்கேள்க்கும் வழி திரப்பு அது
அல்லாவென்பதுச் சரிப்பு வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழுக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

தாமரைக்காயதாகாயம் நபி
தாஜுல்லன்பியாவொளிவாம் அதன்
நேமவழிமூளையாயும் வாசி
நித்திய ஹூவே சகாயம் சரம்
ஹா ஹா திக்கிர் முழக்கிக்குத்தடி ஹூ ஹூமூச்சைப்
பழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

ஆராதாரமும் தாண்டி விடு
ஆட்டக்குதிரையைத் தூண்டி அங்கே
நூராத் தீபம்பார் வேண்டி அதை
நோக்கி சுஜூதுசெய் ஊண்டி வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

முப்பாலும் தாண்டும் ஒளியே அதற்
கப்பாலும் வெட்ட வெளியே பீர்
ஹூப்பாலும் சொன்ன வழியே பற்றிக்
கொள்ளாதார்க்கெமன் பழியே வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கிர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

எட்டடி றெட்டைத்தூண்பள்ளி உள்ளே
இருப்பது ஒரு புள்ளி அதன்
கட்டளைதான் வேதம் வள்ளி அதை
கண்டுதெளியடி கள்ளி வாசி

ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

சொல்லிடுலாயிலா ஹா ஹா இறை
சுருதிஇல்லல்லா ஹூ ஹூ மனு
தில்லுக்குவளே நபி தா ஹா முகம்
மதுர்ரசூலுல்லா ஹீ ஹீ. வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

ஈமான் இஸ்லாம் நடுவே நூர்
இலங்கிஜொலிக்குமொளிவே கண்டு
ஈமானும் கஸ்பு தெளிவே ஆக
தள்ளிடு மூவாசை யிளிவே வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குதடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ (நெல்லு)

தச்சில்லா மாளிகை வீடு ஐவர்
சஞ்சரிக்கும் அஸ்திக்கூடு செல்ல
மச்சுக்குமேல் மனம் நாடு மூச்சில்
மரக்காமலுருப்போடு வாசி
ஹா ஹா சரம் மாத்திக் குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ (நெல்லு)

பத்துள்ளபேருக்கே கன்னி அந்தப்
பைங்கிளியாளேயே யெண்ணி நாமும்
செத்திடுமுன் தவம்பண்ணி அவள்
சேவடியில் வைப்போஞ் சென்னி வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

பளபளவென வாராள் கண்ணை
பகட்டி மறைந்துபோராள் வாட்டங்
தளதளவென்ற சீராள் சொல்லச்
சாத்தியமில்லாத கூறாள் வாசி
ஹா ஹா சரம்மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ (நெல்லு)

பஞ்சரைக் கூட்டுக்குள் கிளியே உள்ளில்
பாத்து ஹூ ஹூ வென்றுமொழியே அது

தஞ்சம் நமக்கு நல் வழியே காட்டும்
சாகா திருக்கவும் தெளியே வாசி
ஹா ஹா சரம்மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

நபிமாரொலிமாரெங்கே மண்ணுள்
நாடிமறைந்தாரே மங்கே பூவில்
அபிமானத்துடனிங்கே நம்ம
னாண்டவனை நீதுதி நங்கே வாசி
ஹா ஹா சரம்மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ (நெல்லு)

அனேகங்கோடிபேர் மண்ணில் போன
தரியாயோ உந்தன் கண்ணில் நீயும்
சினேகம்மனேன்மணிப்பெண்ணில் வைத்து
சீர்பெருவாய் தவம் பண்ணில் ஹீ ஹீ வாசி
ஹா ஹா சரம்மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ (நெல்லு)

ஊர் இலுப்பூரில் பிறந்தோன் மனம்
உவந்து காங்கபம் வழர்ந்தோன் கானு
பீர் முகம்மது புதல்வன் ஞானம்
பாடினேன் புவியில் சிரியேன் வாசி
ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ (நெல்லு)

ஹக்கீம் அய்யூப் பாட்டு இதை
அறிவெனுங் காதிற் கேட்டு ஹூவை
முக்கியம் வாசியில் ஓட்டு புவி
மூன்றுசை விட்டுத் தாட்டு வாசி
ஹா ஹா சரம்மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

தேசவளம் தாராபுரத்தின் வானு
சேகப்துல் காதரின் புதல்வன் ஞானு
நேசம் முகம்மது குணவான் பூவில்
நிலைக்க அச்சினிற் பதித்தான் வாசி

ஹா ஹா சரம் மாத்திக்குத்தடி ஹூ ஹூ திக்கீர்
முழக்கிக்குத்தடி ஹீ ஹீ. (நெல்லு)

முகவுரை

இப்புத்தகமியற்றிய காரணம் யாதெனில் தாராபுரம் மிராசுதார் நீலகிரி, குன்னூர், மேட்டுப்பாளையம் பொள்ளாச்சி, ஒ. எம். அண்கோ பிரசிடெண்டு உ. அசன் முகம்மது ரூவுத்தரவர்களின் விடாமுயற்சியால் ஞானோதய ஆராட்ச்சி சங்கம் ஏற்பட்டு ஆனைமலையில் வாசஞ்செய்தவரும் புக்காரி அஜரத்தவர்களின் தோஸ்த்தும் தாராபுரம் மெஞ்ஞானக்களஞ்சியம் பெரியதனம் கா. சேக் முகம்மது ரூவுத்தரின் நண்பருமாகிய அப்துல்காதர்மஸ்தான் அவர்களின் தலைமையின்கீழ் சங்கம் நடைபெறும்போது ஞானமவுலூது பாத்திஹா தபுருக்கிற்காக மாவு செய்வதற்குச்சில கூலி வேலைக்காரப் பெண்கள் உஸ் உஸ் என்று பெருமூச்சுடன் உலக்கை மாரி மாரி நெல் குத்துகிறதை கண்ணுற்ற உ. அசன் முகம்மது ரூவுத்தர் இவ்வளவு மூச்சு வீணில் போகிறபடியால் என்ன விதமான வேலைகள் செய்யும்போது ஒவ்வொரு மூச்சிலும் ஆண்டவனை திக்கிர் செய்வதெப்படி என்று கேட்டதற்காக அந்த நிமிஷமே பாடலாகக் கோர்வை செய்யப்பட்டது. இப்புஸ்தகம் வேண்டுவோர் கீழ்க் காணும் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளவும்.

உ. ச. மி. முஹம்மது ஹுசேன் ராவுத்தர்,

வெளிப்பட்டணம்

இராமனாதபுரம்.

RAMNAD.